27.08.2024

அ.வ.எண். 383-2017

வாசா.1 - செந்தில்குமார்

<u>14 முதல் 17ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

14 முதல் 17 பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் என்னுடைய தாத்தா சொத்தை நஞ்சப்ப கவுண்டர் பேரன்களான 14 முதல் 17 பிரதிவாதி தவறாக பட்டா பெயர் மாற்றம் செய்துள்ளனர் அதற்காக இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி தவறாக உள்ளதாக சொல்லும் பட்டா இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன். அதை பார்த்து தான் சொல்ல முடியும். நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யாமல் தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆதியில் ஒரு குழந்தைய கவுண்டர் என்பவருக்கு பாத்தியம் என்றால் ஆமாம். குழந்தைய கவுண்டருக்கு ராமன கவுண்டர் மற்றும் நஞ்சப்ப கவுண்டர் என்ற இரண்டு வாரிசுகள் என்றால் ஆமாம். நான் ராமன கவுண்டரின் வகையறா ஆவேன். 16, 17 பிரதிவாதிகள் நஞ்சப்ப கவுண்டர் வகையறா என்றால் ஆமாம். ராமன கவுண்டர் மற்றும் நஞ்சப்ப கவுண்டருக்கு 20.08.1934 ல் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் ஆமாம். அதன்படி ராமன கவுண்டரும், நஞ்சப்ப கவுண்டரும் அவர்களுடைய சொத்துக்களில் தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் ஆமாம். வழக்கு சொத்திற்கும் 16, 17 பிரதிவாதிகளான நஞ்சப்ப கவுண்டரின் வாரிசுகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்பதால் அவர்களை இந்த வழக்கில் சேர்த்தது சரியானது அல்ல என்றால் சரியல்ல.

கருப்பசாமி, பழனிச்சாமி எனது தாய்மாமன். ராமன கவுண்டர் இறந்த பின்னிட்டு மேற்படி கருப்பசாமி மற்றும் பழனிச்சாமி தான் வழக்கு சொத்துக்களை அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் அவர்கள் பொதுவில் தான் அனுபவம் செய்து வந்தார்கள். பொதுவில் என்றால் வசந்தாமணி, தனலட்சுமி, நான் மற்றும் எனது தாய்மாமன்கள் இருவரும் சேர்ந்து அனுபவித்து வந்தோம். நாங்கள் கூட்டாக சொத்துக்களை அனுபவம் செய்வதை காட்டுவதற்கு வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. வழக்கிற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும்போது நான் வழக்கு சொத்திற்கு வில்லங்கம் எதுவும் எடுத்து பார்க்கவில்லை. 14, 15 பிரதிவாதிகள்

வழக்கு சொத்தில் எத்தனை வருடமாக விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தான் எனக்கு விற்பனை செய்த விவரம் எனக்கு தெரியும். 24.06.1987 முதல் கருப்பசாமி மற்றும் பழனிச்சாமி வழக்கு சொத்தில் 2.33 ஏக்கரை 14, 15 பிரதிவாதிகளின் தாயாரான ரங்காத்தாளுக்கு விற்பனை செய்து அதில் இருந்து அவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை.

1987 முதல் 14, 15 பிரதிவாதிகளின் தாயாரான ரங்காத்தாள் பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் உள்ளது அது தெரிந்தும் இந்த வழக்கிற்காக நான் தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதன் பின்னிட்டு ரங்காத்தாள் இறந்துவிட்டார். அதன் பின்பு 14, 15 பிரதிவாதிகள் தான் தொடர்ந்து மேற்படி 2.33 ஏக்கரில் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. அதேபோல் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை வங்கியில் அடமானம் வைத்து திருப்பி உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே ரங்காத்தாள் பெயரில் உள்ள கிரய ஆவணம் இருப்பது தெரிந்தும் அந்த ஆவணத்தை ரத்து செய்ய நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

ஏற்கனவே 1987 ற்கு முன்பாகவே பாகப்பிரிவினை ஏற்பட்டு கால தாமதமாக இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கூட்டு சுவாதீனத்தில் இல்லாமல் கூட்டு சுவாதினத்தில் உள்ளதாக செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இல்லாமல் என்னால் வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. 14 முதல் 17 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் நான் கேட்காததால் அவர்களுக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/செந்தில்குமார்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga

District Munsif,

Sulur